# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.23/2020 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 02 ( PW– 02 ) |
| பெயர் | :- | ஐயாவு |
| தேதி | :- | 18–11–2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

நான் 12-ஆம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் தனியார் சரக்குந்து போக்குவரத்து நிறுவனத்தில் அரியலூரில் மேலாளராக பணிபுரிகிறேன். 2017, 2018 ஆண்டுகளில் அமிர்தா பால் பொருட்கள் தொழிற்சாலையில் மங்களாபுரத்தில் பணிபுரிந்தேன். மேற்சொன்ன தொழிற்சாலை வாதியின் தகப்பனார் ராமசாமிக்கு சொந்தமானது என்றால் இல்லை.

வாதியின் பாட்டனாரை எனக்கு எப்படி பழக்கம் என்றால் நான் அந்த தொழிற்சாலைக்கு சென்றுவந்தபோது பழக்கம். அறுதியாவணம் எழுதி வைக்கப்பட்ட சொத்தின் விவரம் எனக்குத் தெரியாது. வாதி பாட்டனார் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் எங்கு வசித்தார் என்றால் கருமாபுரம் ஊரில் வசித்தார். என்னுடன் வேறு யார் சான்றொப்பம் இட்டது என்றால் கார்த்தி என்பவர். அவரும் என்னுடன் வேலை செய்தார்.

இலட்சுமணன் மகன் ராமசாமியை தெரியும். நான் ராமசாமியிடம் வேலை செய்தேன் என்றும் அவர் கேட்டதற்கு இணங்க நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.